## தொழில் நுட்பக் கல்வித் துறை

செ.வெ.எண்: 421

நாள் 07.07.2011

### செய்திக்குறிப்பு

மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு. பழனியப்பன் அவர்கள் இன்று காலை 11.00 மணியளவில் சென்னை தரமணியில் உள்ள சென்ட்ரல் பாலிடெக்னிக் கல்லூரிக்கு வருகை தந்தார். அப்போது, கல்லூரியில் நடைபெற்றுக் கொண்டிருந்த 'மாணவர் சேர்க்கைகான கலந்தாய்வு' கூட்டத்தினை பார்வையிட்டார். கலந்தாய்வினில் பங்குபெற வந்திருந்த மாணவர்களிடமும் பெற்றோர்களிடமும் சிறிது நேரம் உரையாடினார். பிறகு, சேர்கைக்கான ஆணையை மாணவரிடம் வழங்கினார்.

மேலும், இக்கல்லூரியின் வளாகத்தில் இயங்கி வரும் அனைத்துத் துறைய சார்ந்த பரிசோதன கூடங்களுக்கு சென்று ஆய்வு நடத்தினார். அப்போது, ஆய்வுக் கூடங்கள் காலத்தின் மாற்றத்திற்கு ஏற்றவாறு நவீனப் படுத்தப்பட்டுள்ளதா என்பதை கேட்டறிந்தார். உள் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாக தெரிவித்தார்.

அமைச்சர் அவர்களின் இந்த ஆய்வின்போது தொழில்நுட்பக் கல்வி இயக்கக ஆணையர் உயர்திரு. ரமேஷ் சந்த் மீணா, இ.ஆ.ப. மற்றும் சென்ட்ரல் பாலிடெக்னிக் கல்லூரி முதல்வர் முனைவர் திரு. கா.சுந்தரமூர்த்தி உடனிருந்தனர்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9.

C. Pandian
7/7/11
Senior Personal Assistant to
Minister for Higher Education
Secretariat, Chennai-600 009